பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

03 04 2024 **WEDNESDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. இந்தியப் பொருளாதாரம் நடப்பாண்டில் ஏழு புள்ளி ஐந்து சதவீதமாக வளர்ச்சி அடையும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

2. வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் இணைந்த விவிபேட் தொடர்பான வழக்குகளை விரைவாக விசாரிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

3. பள்ளி பாடப்புத்தகங்களை உரிய நேரத்தில் வழங்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி குழுமம் - **NCERT** தெரிவித்துள்ளது.

4. தைவானில் இன்று நேரிட்ட நிலநடுக்கத்தில் 4 பேர் உயிரிழந்தனர், 60 பேர் காயமடைந்தனர்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் தில்லி இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<**

இந்தியப் பொருளாதாரம் நடப்பாண்டில் ஏழு புள்ளி ஐந்து சதவீதமாக வளர்ச்சி அடையும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

தெற்காசிய நாடுகளின் வளர்ச்சி குறித்து உலகவங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், தெற்காசியாவின் பொருளாதார வளர்ச்சி ஆறு சதவீதமாக இருக்கும் என்றும், குறிப்பாக இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மற்றும் பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளின் பொருளாதார மீட்பு நடவடிக்கைகள் காரணமாக இந்த வளர்ச்சி காணப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் தெற்காசிய நாடுகள், அடுத்த 2 ஆண்டுகளுக்கு வேகமான பொருளாதார வளர்ச்சியை அடையக்கூடிய நாடுகளாக திகழும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டில் தெற்காசியாவின் பொருளாதார வளர்ச்சி ஆறு புள்ளி ஒரு சதவீதமாக இருக்கும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் இணைந்த விவிபேட் தொடர்பான வழக்குகளை விரைவாக விசாரிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

மூத்த வழக்கறிஞர்கள் திரு. கபில்சிபல், திரு. பிரசாந்த் பூஷன், திரு. கோபால் சங்கரநாராயணன் ஆகியோர் இன்று காலை உச்சநீதிமன்ற அமர்வில் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த வழக்கு அடுத்த வாரம் விசாரணைக்கு வரும் என்று உச்சநீதிமன்ற அமர்வு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரும், வயநாடு நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. ராகுல்காந்தி தனது வேட்புமனுவை இன்று தாக்கல் செய்தார்.

முன்னதாக, கல்பட்டா பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டுச் சென்ற அவருடன், காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர்களில் ஒருவரான திருமதி. பிரியங்கா காந்தி, திரு. கே.சி வேணுகோபால் மற்றும் கட்சியின் மூத்த தலைவர்கள் உடன் சென்றனர்.

இந்த தொகுதியில் இடதுசாரி அணியின் வேட்பாளரான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திருமதி. ஆனி ராஜாவும் இன்று மனுதாக்கல் செய்கிறார்.

பிஜேபியின் கேரள மாநிலத் தலைவர் திரு. சுரேந்திரனும் தனது வேட்புமனுவை இன்று தாக்கல் செய்யவுள்ளார்.

கேரளாவில் மொத்தம் உள்ள 20 தொகுதிகளுக்கான இரண்டாம்கட்ட தேர்தல் வரும் 26ஆம் தேதி நடைபெறவுள்ளது.

நாளை வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள் என்பதால் அதிகமான வேட்பாளர்கள் இன்று மனுதாக்கல் செய்து வருகின்றனர்.

மனுக்களின் மீதான பரிசீலனை வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மனுக்களை திரும்பப்பெற வரும் 8ஆம் தேதி கடைசி நாளாகும்.

>>>>><<<<<

மதுபான கொள்கை முறைகேடு மற்றும் சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பாக அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், ஜாமின் கோரி தாக்கல் செய்த மனு தில்லி உயர்நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வருகிறது.

முன்னதாக, திரு. அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டதில் அனைத்து சட்ட நடவடிக்கைகளும் பின்பற்றப்பட்டதாக அமலாக்கத்துறை நேற்று தில்லி உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தது.

>>>>><<<<<

பள்ளி பாடப்புத்தகங்களை உரிய நேரத்தில் வழங்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி குழுமம் - **NCERT** தெரிவித்துள்ளது.

1, 2, 7, 8, 10 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்கள் 33 லட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டுள்ளதாக அது கூறியுள்ளது.

3 மற்றும் 6ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டங்கள் மே மாதம் அச்சடிக்கப்படும் என்றும், 4, 5, 9, 11 ஆம் வகுப்புகளுக்கான புத்தகம் இம்மாதம் விற்பனைக்கு வரும் என்றும் அந்த குழுமம் தெரிவித்துள்ளது.

இந்த பாடப்புத்தகங்கள் குறித்து மாணவர்களும், பெற்றோர்களும் கவலை அடைய வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பல மாநிலங்களில் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி குழுமத்தின் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்று வெளியான தகவல்களை அடுத்து இந்த விவரங்களை தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி குழுமம் இன்று வெளியிட்டுள்ளது.

>>>>><<<<<

தைவானில் நேரிட்ட நிலநடுக்கத்தில் 4 பேர் உயிரிழந்தனர், 60 பேர் காயமடைந்தனர்.

இன்று காலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7 புள்ளி நான்காக பதிவானது.

இதனையடுத்து, அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தைவான் நாட்டின் கிழக்கு கடலோரப் பகுதியான **Hualien** நகரிலிருந்து சுமார் 18 கிலோமீட்டர் தொலைவில் 34 புள்ளி எட்டு கிலோமீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் கடந்த 25 ஆண்டுகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைவிட அதிகமானது என்று அந்நாட்டின் தை-பே நிலநடுக்க ஆய்வு மையத்தின் உயரதிகாரி திரு. **Wu Chien Fu** தெரிவித்துள்ளார்.

முதற்கட்ட தகவல்களின் படி அங்கு பல கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதாகவும், சில கட்டிடங்கள் சாய்ந்து நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் ஜப்பானின் தெற்கு கடலோரப் பகுதியிலும் எதிரொலித்தது.

**Yona Guni** தீவில் இன்று காலை சுனாமி அலை பதிவு செய்யப்பட்டது.

மேலும் 3 மீட்டர் உயரத்திற்கு கடலலைகள் எழக்கூடும் என்பதால் கடலோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் காரணமாக, அங்கும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

மக்களவை தேர்தலை ஒட்டி பல்வேறு தொகுதிகளைப் பற்றி அறிந்து கொள்ளும் 'தொகுதி அலசல்' தொகுப்பில் வேலூர் தொகுதி குறித்து எமது செய்தியாளர் தரும் தகவல் . . . .

(வாய்ஸ் பைட் - மோகன் - 90 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிப்பதற்கு நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற கல்லூரி மாணவிகள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

*(சவுண்ட் பைட் - மாணவிகள் - 40 செகண்ட்ஸ்)*

>>>>><<<<<

முன்னாள் பிரதமர் திரு. மன்மோகன் சிங் மாநிலங்களவை உறுப்பினர் பதவியிலிருந்து இன்று ஓய்வுபெறுகிறார்.

அவர் 1991ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், பிரதமர் நரசிம்மராவ் ஆட்சியின்போது, அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கபட்டார்.

அப்போதைய ஆட்சியில் நிதியமைச்சராக அவர் பொறுப்பு வகித்தார்.

அதன்பின்னர், 2004ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை அவர் பிரதமராக பதவி வகித்தார்.

2019ஆம் ஆண்டு ராஜஸ்தானிலிருந்து மாநிலங்களவைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாநிலங்களவை உறுப்பினராக 33 ஆண்டுகாலம் பதவி வகித்த அவர், இன்றுடன் ஓய்வு பெறுகிறார்.

திரு. மன்மோகன்சிங் தவிர 9 மத்திய அமைச்சர்கள், 54 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று ஓய்வு பெறுகின்றனர்.

திரு. மன்மோகன்சிங் ஓய்வுபெறுவதை ஒட்டி, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் ஆகியோரும் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் தில்லி இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

**Morocco** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் கேரளா - ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>END<<<<<